R4823

# “THE CHURCH OF THE FIRST BORNS”

# “முதற்பேறானவர்களின் சபை”

“முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை.” (எபிரேயர் 12:22,23)

“முதற்பேறானவர்களின் சபை” என்பதை முதலாம் உயிர்த்தெழுதலின் சபையோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. முதலாம் உயிர்த்தெழுதல் என்ற சொற்றொடரில் முதலாம் என்பது சிறந்த, மேன்மையானதை குறிக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதல் கர்த்தரையும் “அவரது சரீரமாகிய சபையை” மட்டுமே உள்ளடக்கியது. வேறு வார்த்தையில் சொன்னால் அவர்கள் மணவாட்டி வகுப்பார் ஆகும். ஆனால் இந்த மகிமையான முதற்பேறானவர்களின் சபையில் ஆவியினால் பிறந்த அனைவரும் உள்ளடங்கியிருக்கிறார்கள். ஆவியின் சுபாவத்தைப் பெறப்போகிற இவர்கள், உலகத்திற்கு தேவனுடைய கிருபை போவதற்கு முன்னதாக, சுவிசேஷ யுகம் முழுவதும் அபிவிருத்தி பண்ணப்படுகிறார்கள். இந்த முதற்பேறானவர்களின் சபையில், புது உடன்படிக்கை அமலுக்கு வருவதற்கு முன்னரே, தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வருகிறவர்கள் அனைவரும் உள்ளடக்கியிருக்கிறார்கள். சிலர் மகா “பிரதான ஆசாரியருடன்” (அந்த சபையின் கீழான பங்கை) புது உடன்படிக்கையை நிறுவுவதில் பங்கு பெறுவார்கள். அவர்கள் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாருக்கும், முதலாவது இஸ்ரயேலருக்கும் பிறகு மற்ற கோத்திரத்தாருக்கும், விநியோகிப்பதில் கொஞ்சம் பங்கை பெறுவார்கள்.

## “நீங்கள் சீயோன் மலையினிடத்திற்கும் பரம எருசலேமினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்”

முதற்பேறானவர்களின் சபை தீர்க்கதரிசனமாக பழைய ஏற்பாட்டில் பஸ்கா தொடர்பாக தீர்க்கதரிசனமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த ராத்திரியில் எகிப்தின் முதற்பேறானவர்கள் அனைவரும் அழிக்கப்பட்ட பொழுது, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவரும் காக்கப்பட்டார்கள். அவர்கள் வீட்டு வாசல்களிலும் மேற்சட்டத்திலும் இரத்தத்தை பூசியதாலும் பஸ்கா ஆட்டில் வீட்டுக்குள்ளே பங்கு பெற்றதாலும் அவர்கள் தப்பித்தார்கள். அதன்பிறகு இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் எல்லாம் லேவி கோத்திரத்தாரால் பரிமாற்றம் செய்யப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த கோத்திரம் ஆசாரிய வகுப்பார் என்றும் ஊழியக்காரர் வகுப்பார் என்றும் இரண்டாக பிரிக்கப்பட்டதையும் நாம் அறிவோம். இவர்கள் எல்லாரும் லேவியராக இருந்தாலும், முன்னானவர்கள் ஆசாரியர்கள் என்றும் பின்னானவர்கள் லேவியர் என்றும் அழைக்கப்பட்டார்கள். இந்த இரண்டு வகுப்பாரும் சுவிசேஷ யுகத்தின் சபைக்கு அடையாளமாக இருந்தார்கள்.

“ஆனால் நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.” (எபிரேயர் 12:22,23) எதற்காக நாம் வந்து கொண்டிருக்கிறோமோ அதை நெருங்கியிருக்கிறோம் என்பதை இது குறிப்பதாக நாம் சரியானபடி புரிந்து கொள்ளுகிறோம். அது பார்வையில் உள்ளது. சிலர் அதை முன்னரே அடைந்திருக்கிறார்கள். நமது கர்த்தர் இலக்கை அடைந்திருக்கிறார். முதற்பேறானவர்களில் மற்ற சிலரும் கூட இலக்கை அடைந்திருக்கிறார்கள். நம்மில் சிலர் இன்னும் அதை அடையவில்லை. ஆனால் இதைத்தான் நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் அதிகாரத்திற்கும் தெய்வீக திட்டத்தில் நமது இடத்திருக்கும் வந்திருப்போம். அதன்பின் “ஆபத்துக் காலம்” வரும். இத்துடன் இந்த யுகம் முடிவுடையும். இதை சீனாய் மலையின் அதிர்வு நிழலாக காண்பிக்கிறது. இதன் தொடர்ச்சியாக நாம் எண்ணற்ற தேவதூதர்களின் கூட்டத்தை நெருங்குகிறாம் என்றும் வாசிக்கிறோம்.

இங்கே அப்போஸ்தலர் எதிர்கால மகிமையை நமக்கு முன் வைப்பதாக தெரிகிறது. நாம் நமது பரம பிதாவையும், பரலோக கர்த்தரையும் பார்த்து முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையும் அறிமுகம் ஆவதோடு மாத்திரமல்ல, எண்ணற்ற தேவதூதர்களின் கூட்டத்தோடும் அறிமுகம் ஆவோம். இந்த தூதர்கள்தான் கர்த்தருக்கு பயந்தவர்களைச் சுற்றி பாளையமிறங்கி விடுவிக்கிறவர்கள். (சங்கீதம் 34:7) இவர்கள் இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு ஊழியம் செய்யும்படி அனுப்பப்படுகிறவர்கள். (எபிரேயர் 1:14) அவர்கள் இங்கே நம்முடன் இருந்து நமக்குரியவைகளை மேற்பார்வையிடுகிறார்கள். ஆவிக்குரிய தளத்தில் அறிமுகமாவது நமக்கு சந்தோஷமாக இருக்கும். இவைகளை அப்போஸ்தலர் சொல்லாமலிருந்தால் இதை நாம் விநோதமாக நினைத்திருப்போம். ஏனெனில் நாம் நெருங்குகிற காரியங்களை அவர் கணக்கிடுகிறார்.

இவ்விதமாக லேவியரில் ஆசாரியர்களின் சிறுகூட்டத்தையும் சேர்க்கிறது போல முதற்பேறானவர்களின் சபையானது “திரள் கூட்டத்தாரையும்” சேர்க்கிறது. லேவியருக்கு தேசத்தில் சுதந்தரம் இல்லாதது போல “சிறு மந்தைக்கு” மட்டுமல்ல ஊழிய வகுப்பும் தோழி வகுப்புமாகிய திரள் கூட்டத்தாருக்கும் பூமிக்குரிய சுதந்தரத்தில் பங்கு இல்லை. ஆனால் பரலோக சுதந்தரத்தில் ஒரு பங்கை பெறுவார்கள்.